மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அசல் வழக்கு எண்.76/2022 நாள்– 10.07.2023

வாதியின் / பிரதிவாதியின் ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி P.சீதாலட்சுமி, Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்– சரவணக்குமார் (வா.சா.1) தந்தையின் பெயர்–

விலாசம்– தாலுகா–

வயது– தொழில்

ஜாதி– சமயம்–

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) 13.1.2020 – தபசில் சொத்திற்குரிய வில்லங்க சான்றிதழ் – கணினி நகல் – வா.சா.ஆ.1

2) 28.11.2005 – 1ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.2

3) 7.2.2007 – 5ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.3

4) 6.1.2022 – வாதி பொது அதிகார ஆவண எண்.54/B4ன் படி சான்றிட்ட நகல் கோரி சாத்தூர் சார்பதிவாளர் அவர்களுக்கு அனுப்பிய மனு – உண்மை நகல் – வா.சா.ஆ.4

5) 11.1.2022 – வாதிய அனுப்பிய மனுவினை சாத்தூர் சார்பதிவாளர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை – அசல் – வா.சா.ஆ.5

பிராதில் கோரியபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி கு.வி ஒத்திவைக்கப்படுகிறது)